FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313273

1. District மாவட்டம் : Ranipet PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption Ranipet Year: ஆண்டு 2026 FIR No. மு.த.அ. எண் 08/2026 Date: நாள் 07.09.2026

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act, 1988 as amended by Sections பிரிவுகள்: u/s 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: The PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 19.8.2026 @18.00 hrs
Date to நாள் வரை : 4.9.2026 @ 12.00 hrs
Time Period நேர அளவு :
Time from நேரம் முதல் :
Time to நேரம் வரை :

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 7.9.2026
Time நேரம் : 09.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD-Volume-III 2026
Time நேரம் : 7.9.2026 @09.00 hrs and 10.00 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் – written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் – o/o the Assistant Engineer, TNPDCL, Arakkonam East North East 70 Kms

Beat Number முறைக் காவல் எண் : –
(b) Address முகவரி : –

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : –
District மாவட்டம் : –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Yuvaraj
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : Selvamani
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 29/2026
(d) Nationality நாட்டினம் : Indian
(e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
Date of Issue வழங்கப்பட்ட நாள் : –
Place of Issue வழங்கப்பட்ட இடம் : –
(f) Occupation தொழில் : Drama Artist
(g) Address முகவரி : No. 222, Bajanai koil street, Kizhkuppam village, Arakkonam TK, Ranipet District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr, Sundaramurthy, Commercial Inspector, o/o the Assistant Engineer, TNPDCL, Arakkonam East, Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
– No delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. [signature] 07/09/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi 7/9/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.09.2026 @ 12.00 hrs

Name: பெயர் S. Vijayalakshmi,
Rank: நிலை .....No. எண் .....
Inspector of police,
Vigilance & Anti-Corruption,
Ranipet.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 07.09.2026 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திரு.S. யுவராஜ், த/பெ செல்வமணி, எண்.222, பஜனை கோயில் தெரு, கீழ்குப்பம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: இராணிப்பேட்டை 7.9.2026 அனுப்புனர் S. யுவராஜ், த/பெ செல்வமணி, எண்.222, பஜனை கோயில் தெரு, கீழ்குப்பம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இராணிப்பேட்டை. அய்யா, நான் இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா, கீழ்குப்பம் பழைய காலனியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என்னுடைய அப்பா பெயர் செல்வமணி, அம்மா பெயர் மலர்விழி. என்னுடன் பிறந்தவர்கள் 2 அண்ணன்கள். மூன்று பேருக்கும் திருமணமாகி விட்டது. அண்ணன்கள் இருவரும் தனித்தனியாக வசித்து வருகின்றனர். நான் என்னுடைய மனைவி மற்றும் இரண்டு மகன்களுடன் என்னுடைய பெற்றோருடன் வசித்து வருகிறேன். நான் என்னுடைய 13 வயது முதல் நாடக கலைஞராக இருந்து வருகிறேன். கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் கலைமகள் நாடக மன்றம் என்ற பெயரில் நான் தனியாக நாடக குழு நடத்தி அதில் வரும் வருமானத்தை கொண்டு ஜீவனம் செய்து வருகிறேன். தற்போது நாங்கள் வசித்து வரும் இடம் என்னுடைய அம்மா மலர்விழி அவர்களின் பெயரில் உள்ளது. அங்கு ஏற்கனவே குடிசைவீடு இருந்தது. அதை இடித்து விட்டு கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு அரசால் வழங்கப்படும் வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக அந்த இடத்தில் வீடு கட்டி முடித்து விட்டோம். ஏற்கனவே குடிசை வீட்டில் இருந்த மின் இணைப்பை அவர்கள் துண்டித்து விட்டதால் புதிய வீட்டிற்கு மின் இணைப்பு இல்லாமல் இருந்தது. அப்போது நான் EB அலுவலகத்திற்கு சென்று சொன்ன போது பழைய குடிசை வீட்டில் இருந்த மின் இணைப்பை தருவதாகவும் 3 மாதத்திற்குள் புதியதாக இணைப்பு வேண்டி ஆன்லைனில் விண்ணப்பம் அனுப்பும்படி சொன்னார்கள். பின்னர் அந்த மின் இணைப்பையும் வீட்டிற்கு தந்து விட்டு சென்றார்கள். அவர்கள் சொன்ன 10 நாட்களிலே எங்களுடைய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி கடந்த 18.08.2026 அன்று ஆன்லைனில் அப்ளை செய்தேன். அதன்பிறகு கடந்த 19.08.2026 புதிய மின் இணைப்பு பெறுவதற்கு அரசு செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ.5,575/- ஆன்லைனில் செலுத்தி விட்டேன். அன்றைய தினமே மாலை சுமார் 4.00 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது, ஒரு நபர் என்னுடைய வீட்டிற்கு வந்து தான் அரக்கோணம் EB அலுவலகத்திலிருந்து வருவதாக சொன்னார். அதன்பிறகு மீட்டர் நாளைக்கு வந்துவிடும் என்றும் அவருக்கு தனியாக பணம் ரூ.2,500/- கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

அதற்கு நான் அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் அனைத்தையும் ஆன்லைனில் செலுத்தி விட்டேனே எதற்காக பணம் ரூ.2,500/- கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்கு தனியாக பணம் ரூ.2,500/- கொடுத்தால் உடனே மீட்டர் பொருத்தி மின் இணைப்பு கொடுப்பேன் பணம் கொடுத்தால் வேலை நடக்கும் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். அதன் பிறகு 10 நாட்கள் ஆன பிறகும் மீட்டர் பொறுத்த EB அலுவலகத்திலிருந்து யாரும் வராததால் கடந்த 31.08.2026 அன்று மதியம் சுமார் 1.30 மணிக்கு அரக்கோணம் EB அலுவலகத்தில் சென்று கடந்த 19.08.2026 அன்று வீட்டிற்கு வந்த நபரை சந்தித்தேன். அப்போது அவர் நீ கிளம்பு நான் நேரில் உன்னுடைய வீட்டின் அருகே வருகிறேன் என்று சொல்லி அவருடைய பெயர் சுந்தரமூர்த்தி, CI என்றும் செல்போன் எண்.9840254127 என்றும் சொன்னார். அன்றைய தினம் மாலை சுமார் 5.00 மணிக்கு நான் இரண்டு முறை சுந்தரமூர்த்தி அவர்களுக்கு போன் செய்தேன் அவர் எடுக்கவில்லை. அதன்பிறகு அன்று மாலை சுமார் 6.30 மணிக்கு சுந்தரமூர்த்தி என்பவர் என்னுடைய செல்போன் எண்.8248967009 போன் செய்து அரக்கோணம் SR Gate அருகே வருமாறு சொன்னார். அவர் சொன்னபடி நான் மாலை சுமார் 7.15 மணிக்கு அங்கு சென்றேன். அப்போது அவர் எனக்கு பணம் ரூ.2,500/- கொடுத்தால் உன்னுடைய வேலை உடனே முடித்து மீட்டரை பொருத்திவிட்டு EB கனெக்சன் கொடுப்பேன் இல்லையென்றால் உன்னுடைய வீட்டிற்கு புதிய மின் இணைப்பு கிடைக்காது என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னவுடன், சரிவிடு கடைசியாக ரூ.2,000/- கொடு, உன்னுடைய வேலையை முடித்து கொடுக்கிறேன் என்று திட்டவட்டமாக தெரிவித்து விட்டார். அப்போதே மீட்டர் பாக்ஸ் ஒன்று கொடுத்து இதை எடுத்து கொண்டு போது வீட்டில் வை என்றும், வீட்டிற்கு வந்து மாட்டுவார்கள் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். அதன்பிறகு அன்று இரவே சுமார் 8.30 மணிக்கு போன் செய்து மீட்டர் அம்மாவிடம் கொடுக்குமாறும் நான் வந்து மாட்டி கொடுக்கிறேன் என்றும் சொன்னார். 01.09.2026 நான் வேலையாக வெளியில் சென்றிருந்தபோது மதியம் சுமார் 1.30 மணிக்கு என்னுடைய அம்மா எனக்கு போன் செய்து, வீட்டில் வைத்திருந்த புதிய மீட்டரை EB அலுவலகத்தில் இருந்து ஏற்கனவே வந்திருந்த நபர் உங்க பையன் பணம் கொடுத்தாரா என்று கேட்டதாகவும் அதற்கு என்னுடைய அம்மா என் மகன் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்று சொன்னதும் அவர் அந்த மீட்டரை கொடுக்க சொல்லி எடுத்து சென்று விட்டதாக தகவல் சொன்னார். எனவே நான் சுமார் 4.00 மணிக்கு EB அலுவலகம் சென்று சுந்தரமூர்த்தி அவர்களை பார்த்து ஏன் சார் மீட்டரை வாங்கிட்டு போயிட்டீங்க என்று கேட்டதற்கு, அந்த மீட்டர் வேறு ஒருவர் வீட்டிற்கு வந்ததாகவும், இரண்டு நாட்களில் நான் கேட்ட ரூ.2,000/- பணத்தை ரெடி செய்து விட்டு வந்து பார் மீட்டர் பொருத்தி தருகிறேன் என்று சொன்னார்.

பின்னர், மீண்டும் 4.9.2026 அன்று மதியம் சுமார் 12.00 மணிக்கு என் வீட்டிற்கு சுந்தரமூர்த்தி வந்து என் அம்மாவிடம் உங்க பையன் காசு கொடுத்திருக்கிறாரா என்று கேட்டுள்ளார். அதற்கு என் அம்மா காசு எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னதும், என் அம்மா எனக்கு போன் செய்து, EB ஆபிஸிலிருந்து அன்னைக்கு வந்தவர் வந்திருக்கிறார், அவர் போனை உன்னிடம் கொடுக்க சொன்னார் என்று சொல்லி போனை கொடுத்தார். என் அம்மாவின் போனில் பேசிய சுந்தரமூர்த்தி என்னிடம் காசு கொடுத்துட்டு போகலியா என்று கேட்டார். அதற்கு நான் என்னுடைய நாடகம் மழையால் கேன்சலாகிடுச்சு, சனி, ஞாயிறு நாடகம் ஆடிட்டு, திங்கட்கிழமை காலைல ஆபீஸ் வருகிறேன் என்று சொன்னதற்கு, அவர் என்னிடம் போன் செய்துவிட்டு வா என்று சொன்னார். லஞ்சமாக பணம் ரூ.2,000/-ஐ கொடுத்து புதிய மின் இணைப்பு பெற எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக ரூ.2,000/- பணம் கேட்கும் சுந்தரமூர்த்தி, CI, அரக்கோணம் கிழக்கு EB அலுவலகம், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். SD/- XXXXXX (S.Yuvaraj) 07/09/2026.

Sir/Madam,

Received the complaint on 07.09.2026 at 09.00 hrs. and after verifying the antecedents of the accused and credibility of the complainant, I have registered a case in Ranipet V&AC Cr.No.8/2026 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 on 07.09.26 at 10.00 hrs. Sd/-xxxxx 7/9/26 (S.Vijavalakshmi), Ins. of Police, V&AC, Ranipet.

The FIR in original along with the complaint is sent to the Hon'ble Principal District & Sessions Judge / Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

Vijayalakshmi 7/9/26
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ranipet